மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : செங்கற்பட்டு நகராட்சியில் உள்ள சாதிப் பெயருடன் கூடிய தெருக்களைப் பொறுத்த வரையில் அவற்றில் நபர்களின் பெயர்களை மட்டும் நிறுத்திக் கொண்டு சாதிப் பெயர்களை நீக்க ஒப்பளிப்பு வழங்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, 30---6---1969 அன்று நடந்த தனது கூட்டத்தில் செங்கற்பட்டு நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

திரு. என். கிட்டப்பா : செங்கற்பட்டு நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்போல தமிழகத்தில் வேறு எந்த, எந்த நகராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாதிப்பெயர்களை நீக்க வேண்டும் என்று மதுரை, இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, தாம்பரம் போன்ற இடங்களில் இருந்தும் தீர்மானம் போடப்பட்டு வந்து அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வேறு சில இடங்களுக்கு அனுமதி வழங்கவும் யோசிக்கப்பட்டு வருகிறது.

Harijan Colony at Pullarambakkam

* 266 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the construction of houses in the Harijan colony at Pullarambakkam, Tiruvellore taluk, Chingleput district started during the previous Ministry has been completed; and

(*b*) if not, the reasons for the same?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) புள்ளரம்பாக்கம் கிராமத்திலுள்ள எஸ. விஜயன் என்பவரிடம் வீடுகள் கட்டும் வேலை ஒப்படைக்கப்பட்டது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் மீண்டும் மீண்டும் உத்தரவுகளும், கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வேலையை முடிப்பதற்கு அவர் உண்மையாக முயற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை. அவ்வேலையை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்து வருகிறார்.

DR. H. V. HANDE : Is it not a fact that the beneficiaries of these 10 huts received an amount of Rs. 10,000 and odd as loan and the Special Tahsildar instructed that this amount should be paid to the contractor after the contractor had built the houses? In view of the fact that the money has been paid, and the houses have not been constructed, will the Hon. Minister give an assurance asking these people not to pay loans back till the houses are properly built by Governmental Departments?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படித் தான் நன்மை அடைகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கொடுத்த பணத்தையும் அவர் வாங்கிக்கொண்டிருக்கிறார். இதுவரையிலும் 11,156 ரூபாய் வாங்கியிருக்கிறார். இன்னும் 8 ஆயிரம் சொச்சம் கொடுத்தால் அவரே கட்டிக்கொடுப்பதாகச் சொல்கிறார், மாவட்ட ஆட்சியாளர் இவற்றைக் கட்டி முடிக்க எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறார். மேற்கொண்டு பணத்தைக் கொடுத்து இவரையே கட்டச் சொல்லலாம். அல்லது வேறு யாரையாவது கட்டச் சொல்லலாம்.